**பேராதனைப் பல்கலைக்கழகம் - 2016**

-----------------------------------------------------------------------------

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 2018 சனவரி 12 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

----------------------------------------------------------------------------------------------------------

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

--------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம்தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 111 இன் பிரகாரம் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01

**(i)** கணக்கீட்டு நியமத்தின் 48 ஆம் பந்தி பிரகாரம், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தால் தேவைப்படும் அல்லது அங்கீகரித்திருந்த போது தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பதிலீடு செய்யக் கூடாதெனினும், கூட்டுத்தொகை ரூபா 251,966,053 ஆன பண செலவு மீதி, கூட்டுத்தொகை ரூபா 482,766,698 ஆன 52 வரவு மீதிகளுடன் பதிலீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களிள் காட்டப்பட்டிருந்தது.

**(ii)** கணக்கீட்டு நியமத்தின் 99 ஆம் பந்தி பிரகாரம், நிறுவகத்தின் பற்றாக்குறை மற்றும் மேலதிகை இணங்கானும்போது அனைத்து வருமானம் மற்றும் செலவு நிதி செயலாற்றுகை கூற்றிற்கு உள்ளடக்கப்பட வேண்டும். எனினும் அதற்கு மாற்றமாக பல்கலைக்கழகத்தின் பல்வேறு செயற்பாடுகளுக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த 596 நிதியங்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற ரூபா 1,072,485,027 ஆன வருமானம் மற்றும் ரூபா 990,977,313 ஆன செலவும் அந் நிதிய கணக்குகளுக்கு வரவு மற்றும் செலவாக செம்மையாக்கப்பட்டு அக் கணக்குகளின் மீதிகள் மட்டும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02

**(i)** நிதி செயலாற்றுகை கூற்றில் வருமானமாக இணங்கண்டிருந்த வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து கிடைத்த ரூபா 31,648,391 தொகை

காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது மீண்டும் பதிவழிக்கப்பட்டதாக அசைவற்ற நிதி பாய்ச்சலின் கீழ் சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ii)** காசுப்பாய்ச்சலின் நிதி செயற்பாட்டின் கீழ் நன்கொடை நிதியங்களின் அதிகரித்தல் ரூபா 8,936,554 ஆக காட்டப்பட்டிருந்ததடன், அதற்குறிய பட்டியல் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் அதன் அதிகரிப்பு ரூபா 9,891,671 ஆனமையால் ரூபா 955,117 ஆன தொகை நிதி உட்பாய்ச்சல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**(iii)** மீளாய்வாண்டின் வெளிவாரி ஆராய்ச்சி நிதியத்தின் நிதி உட்பாய்ச்சல் ரூபா 52,602,726 ஆனதுடன், காசுப்பாய்ச்சலின் அது ரூபா 10,268,052 நிதி வெளிப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது.

**(iv)** நானாவித கடன்பட்டோர் மற்றும் பெற வேண்டிய மீதிகளில் அதிகரிப்பு ரூபா 45,178,441 ஆன போதிலும், அது செயற்பாட்டு மூலதன அசைவின் கீழ் ரூபா 33,287,127 ஆக குறிப்பிட்ட காரணத்தால் ரூபா 11,891,314 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**(v)** மீளாய்வாண்டினுள் வருமானம் பயன்படுத்தி பெறுகை செய்யப்பட்டிருந்த ரூபா 42,732,486 ஆன நிலையான சொத்துக்கள் காசல்லாத பாய்ச்சலாக கருதி மீளாய்வாண்டின் பற்றாக்குறைவிற்கு சேர்க்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03

---

கணக்கீட்டு நியமத்தின் 47 ஆம் பந்தி பிரகாரம், நிறுவனத்தினால் போதியளவான கடந்த காலப்பகுததியில் ஏற்பட்ட நிகழ்வுகளை பின்னோக்கிய ரீதியில் சரிசெய்யப்பட வேண்டிய போதிலும், பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமை புரிந்த அலுவலர் ஒருவருக்கு 1982 நவம்பர் 01 முதல் 2007 மார்ச் 07 ஆம் திகதி வரை காலப்பகுதிற்கான ஓய்வூதிய உபகாரமாக மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்தது ரூபா 5,466,982 ஆன தொகை மீளாய்வாண்டில் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

---

நியமத்தின் 65 ஆம் பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 2,108,945,094 கிரயத்திலான நடைமுறையல்லாத சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08

---

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் 100 மற்றும் 105 ஆம் பந்திகள் பிரகாரம் நிறுவனமொன்றால் அறிக்கையிடும் திகதிக்கு உள்ள எதிர்பார்க்கப்படாத பொறுப்பு வர்க்கமொன்றுக்காக எதிர்பார்க்கப்படாத பொறுப்பின் தன்மை மற்றும் எதிர்பார்க்கப்படாத சொத்துக்களின் தன்மையின் சுருக்கமான விபரமொன்று வெளியிடப்பட வேண்டியதுடன், நடைமுறை சந்தர்ப்பங்களில் அதன் நிதி தாக்கத்தின் மதிப்பீடொன்று வெளிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. நியமத்தின் 108 பந்தி பிரகாரம் தேவையான எதாவது தகவல்கள் வெளியிடப்படுவது நடைமுறையில்லாததனால் அவ்வாறு செயற்படுத்தப்படாத சந்தர்பங்களில் அவ் விடயத்தை வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழகத்தினால்

அறிக்கையிடும் திகதிக்கு நிலவிய 69 வழக்குகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்ககப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக நடைமுறைப் பயிற்சி வழங்குவதற்காக அம் மாணவர்களில் மீளாய்வாண்டினுள் அறவிடப்பட்ட ரூபா 712,698 ஆன வெளிநாட்டு மாணவ வருமான கணக்கிற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும், அப் பணம் சுழற்சி நிதியக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 3 செலவின விடயங்களின் கீழ் முன்னைய ஆண்டுகளுக்கு உரிய 76 சந்தர்பங்களில் செலுத்திருந்த ரூபா 715,087 தொகை மீளாய்வாண்டில் செலவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழக வேலை பிரிவின் தரவுகளின் படி , மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு 15 ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தவேண்டிய ரூபா 64,612,289 ஆன தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2 நிலையான வைப்பு சான்றிதழ் தொடர்பாக வருடாந்த வட்டி வருமானம் ரூபா 136,548 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 302,621,361 செலவினத்தால் ரூபா 126,300,746 ஆன நடைமுறை செலவாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும், ரூபா 23,625,883 ஆன 03 வேலை மாதிரிகள் பரிசோதனையின் போது அவையின் ரூபா 17,545,990 ஆன மூலதன செலவு உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) வெளிநாட்டு நாணய மாற்று பெறுமதி மாற்றமடைவதனால் இனங்காணப்பட்ட செலாவணி அனுகூலங்கள் அல்லது பிரதிகூலங்கள் செயலாற்றல் கூற்றுக்களில் செம்மையாக்கப்படுவதாக பல்கலைக்கழக கணக்கீட்டு கொள்கைகளில் குறிப்பிடப்பட்ட போதும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் இனங்காணப்பட்ட ரூபா 365,842 ஆன செலாவணி அனுகூலங்கள் அதன் பிரகாரம் செயலாற்றல் கூற்றுக்களில் செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பல்கலைக்கழகத்திற்கு இணைந்த தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்தினால் 2016 ஆண்டுனுள் பெறுவனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,092,858 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்ட ரூபா 314,951,861 பெறுமதியான மிருக மருத்துவ மற்றும் மருதத்துவ பீடங்களுக்கு சொந்தமான 03 கட்டிடங்கள் நிதி நிலைமை கூற்றில் சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வழங்கல் பத்திரத்தினூடாக பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொடுத்திருந்த தொடங்கொல்ல ஆராய்ச்சி பண்ணை நடாத்திச்செல்லும் 196 ஏக்கர் காணியின் பெறுமதியை மதிப்பிடப்பட்டு வருடாந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பொறியியல் பீடத்தின் உற்பத்தி பொறியியல் திணைக்களத்தின் 2016 ஜூலை 05 ஆம் திகதி தீ பற்றியதன் காரணமாக ஏற்பட்டுள்ள ரூபா 5,361,835 ஆன இழப்பு தொடர்பாக மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) அரச மூலதன மானியங்களை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் ஆயுட்காலத்திற்கு ஒத்ததாக பதிவழித்தல் கணக்கிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டில் மீள்மதிப்பிடப்பட்ட ரூபா 235,955,000 பெறுமதியான 168 வண்டிகள் தொடர்பாக அச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட வருடம் மற்றும் மீதி பயனுள்ள ஆயுட்காலத்தை புறக்கணித்து மீள்மதிப்பிடப்பட்ட பெறுமதியின் 20 சதவீதமாக ரூபா 47,191,000 பதிவழிக்கப்பட்டிருந்தன.

### 2.2.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் இடர் கடன் மீதி பட்டோலையுடன் ஒப்பிடும் போது ரூபா 761,011 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலை பிரகாரம் வருடத்திற்கான முதலீட்டு வருமானம் ரூபா 67,874,679 ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றின் ரூபா 60,743,980 ஆக காட்டப்பட்ட காரணத்தால் ரூபா 7,130,699 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பல்கலைக்கழகத்திற்கு விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவனத்தால் கிடைக்க வேண்டியதாக ரூபா 651,283 ஆன வருமானம் கணக்கிடப்பட்டிருந்த போதிலும், விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவன நிதிக்கூற்றுக்களில் பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதியாக ரூபா 283,083 மாத்திரம் கணக்கிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 368,200 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டில் கூட்டுத்தொகை ரூபா 6,812,102,321 ஆன 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக அவைகள் முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | ஏனைய நிதிய வருமானம் | 1,072,485,027 | வருமானம் மற்றும் செலவினம் வகைபடுத்தல் |
| (ஆ) | ஏனைய நிதிய செலவினம் | 990,977,313 | |
| (இ) | நானாவித கடன்கொடுத்தோர் | 201,171,096 | மீதி உறுதிச் சான்று மற்றும் ரூபா 9,556,003 தொடர்பான காலப்பகுப்பாய்வு |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நானாவித கடன்பட்டோர் | 39,818,516 | மீதி உறுதிச் சான்று மற்றும் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு |
| (உ) | நானாவித முற்பணம் | 363,930 | மீதி உறுதிச் சான்று மற்றும் காலப்பகுப்பாய்வு |
| (ஊ) | நிலையான சொத்துக்கள் | 4,411,508,085 | 06 வகை சொத்துக்களுக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பௌதீக மென்மையாய்வு அறிக்கை. |
| (எ) | 2014 ஆண்டு முதல் 2016 வரை பல்கலைக்கழக ஆராய்ச்சி நிதியத்தினால் நேராக மேற்கொள்ளப்பட்டிருந்த ஆராய்ச்சி கருத்திட்ட செலவினம் | 79,793,903 | மேற்கொள்ளப்பட்டிருந்த ஆராய்ச்சி கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் |
| (ஏ) | 15 ஆராய்ச்சி நிதியங்களின் செலவினங்கள் | 15,984,451 | ஆராய்ச்சி உத்தேசதிட்டங்கள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள். |
| | | ---------------------- | |
| | | 6,812,102,321 | |
| | | ========= | |

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள கல்விசார் பதவியணியினரின் விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகத்துடன் கைச்சாதிட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் 141 விரிவுரையாளர்களிடமிருந்து 2017 மார்ச் 31 இற்கு ரூபா 116,686,399 அறவிடப்பட வேண்டி இருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் 06 பீடங்களுக்கு உரிய மாணவர்களிடமிருந்து 01 வருட முதல் 35 வருடங்களுக்கு மேலான காலபகுதியில் இருந்து அறவிட வேண்டியதாக நிலவிய ரூபா 2,981,936 ஆன சாலை கட்டணம் மற்றும் ரூபா 2,421,663 ஆன தண்டக்கட்டணமாக கூட்டுத்தொகை ரூபா 5,403,599 ஐ இதுவரை அறவிடுவதற்கு இயலாமல் இருந்தது. அதனுள் 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை காலத்திற்கான ரூபா 3,561,893 ஆன மீதியொன்று உள்ளடங்கியிருந்தது.

(இ) 10 ஆண்டுகளுக்கு மேலான காலத்திலிருந்து அறவிடப்படாது நிலவிய ரூபா 113,778 ஆன சம்பள முற்பணம் மற்றும் ரூபா 146,489 ஆன விழா முற்பணம் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படாததுடன், அவற்றுள் ரூபா 227,489 ஐ இனங்காண இயலாமல் இருந்தது.

(ஈ) 10 வழங்குனர்களுக்கு செலுத்தவேண்டிய ரூபா 27,093,596 தொகை ஓராண்டிற்கும் அதிக காலம் கடந்திருந்த போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்வேறு நபர்கள் மற்றும் 15 நிறுவனங்களுக்கு ரூபா 225,245 ஆன முற்பணம் வழங்கப்பட்டு ஓராண்டு முதல் 25 ஆண்டு காலங்கள் கடந்திருந்த போதும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான கெட்டம்பே பிரதேசத்தில் உள்ள 40.97 பர்சஸ் காணியை 1987 திசெம்பர் 31 முதல் 30 வருட காலத்திற்காக 1972 இலக்க தளவரிபடம் மூலம் பல்கலைக்கழக முகாமையினால் மலைநாட்டு கிராமிய புனர்நிர்மாண திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. குத்தகை வரி ஒப்பந்த நிபந்தனை பிரகாரம் வருடாந்த குத்தகை வாடகை ரூபா 60,000 ஆனதுடன் அப்பெறுமதி 05 வருடங்களுக்கு ஒருமுறை திருத்தப்பட வேண்டிய போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததனால் 2016 திசெம்பர் 31 திகதிக்கு பல்கலைக்கழகத்திற்கு பெற வேண்டிய நிலுவை குத்தகை வாடகை ரூபா 6,580,000 ஆகவிருந்தது. மேலும் பல்கலைக்கழக முகாமையின் அனுமதியின்றி ரூபா 11.6 மில்லியன் பெறுமதியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டன.

(எ) பேராதெனிய நகரில் வாராந்த சந்தை நடத்துவதற்காக பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான ரத்மலே காணியின் பர்சஸ் 25 ஐ குத்தகை அடிப்படையில் 1975 ஆண்டு முதல் கண்டி கடவத் ஸதர கங்கவட கோரளை பிரதேச சபைக்கு வழங்கிருந்தது. தொடர்புடைய குத்தகை உடன்படிக்கை பிரகாரம் 1997, 2001, 2006, 2011, மற்றும் 2016 ஆண்டுகளில் திருத்தப்பட்ட புது குத்தகை மதிப்பீட்டு பெறுமதி பிரகாரம் நடவடிக்கை எடுக்காததனால் 2016 திசெம்பர் 31 திகதிக்கு பேராதெனிய பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டிய நிலுவை குத்தகை வாடகை ரூபா 9,174,000 ஆனது.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம், ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 திகதிய பா/ஆயதன/11 ஆம் இலக்க தொழில் ஆணையாளரின் கடிதம். | - 06 அலுவலர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு பணம் ரூபா 108,788 ஐ மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 21,757 ஆன பங்களிப்பு பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | - பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பை கணிப்பிடும் போது 07 பீடங்களில் கல்விசார் பதவியணியினருக்கு செலுத்தப்பட்ட கல்வி படிகள் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக 2016 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக நிதியத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 85,701,160 ஆனது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க தேசிய இறைவரி அதிகாரச்சட்டத்தின் உழைக்கும் போது செலுத்தும் 07 ஆம் இலக்க வரி வாய்பாடு | பிரதான தொழில்தருநரல்லாத ஏனைய தொழில்தருநர்களால் செலுத்தப்படும் ஊதியங்களின் 50,000 ரூபாவை விஞ்சிய சந்தர்ப்பங்களில் 10 சதவீதமான உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட வேண்டிய போதிலும், மருத்துவ பீடத்தின் பரீட்சை கட்டண செலவினம் ரூபா 1,184,457 இனால் ரூபா 118,446 ஆன வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை<br>----------------------------------------------- | |
| (i) | **II** ஆம் பகுதியின் **VIII** ஆம் அத்தியாயத்தின் 6.2 இன் **(ii)** மற்றும் **(iii)** ஆம் பிரிவுகள். | தமது கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய சேவைகளிலிருந்து உழைக்கும் கட்டணங்களிலிருந்து 10 சதவீதம் தமக்கு உரிய உயர்கல்வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ள போதிலும் பல் மருத்துவ பீடத்திற்கு சொந்தமான பல் உதவி பயிலுனர் பாடசாலை மற்றும் தொலை மற்றும் தொடர் கல்வி நிறுவனத்தால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,361,000 ஆன வெளிவாரி விரிவுரைக் கட்டணங்களிலிருந்து ரூபா 136,100 ஆன தொகை பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | **II** ஆம் பகுதியின் XX அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 பந்தி | வருகை மற்றும் வெளிச்செல்லல் உறுதிப்படுத்தப்படாமல் கல்விசார் உதவி பதவியணியினரில் 702 அலுவலர்கள், கல்விசார் பதவியணியினரில் 37 பேர் மற்றும் 20 உதவிநிலைய அதிகாரிகளுக்காக மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,146,192,760 செலுத்தப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>--------------------------------------- | |
| **(i)** | 2015 ஜூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 371(2)(அ) | - தினந்தோறும் ஏற்படும் சிறு செலவுகளுக்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் அனுமதியின் பிரகாரம் ரூபா 25,000 ஆன உச்ச சிறு செலவு கட்டு நிதி வழங்கப்பட முடியுமான போதும், கலை பீடம், மருத்துவ பீடங்களால் எல்லை விஞ்சி 03 சந்தர்ப்பங்களில் ரூபா 625,000 ஆன கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது.<br><br>- தினந்தோறும் ஏற்படும் சிறு செலவுகளை மேற்கொள்வதற்கு மாத்திரம் கட்டு நிதி பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் மருத்துவ பீடம் மீளாய்வாண்டு ஒக்தோபர் 15 ஆம் திகதி வரையும் கட்டு நிதியினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 6,216,742 ஆனது. |
| **(ii)** | நிதிப்பிரமாணம் 396 | பல்கலைக்கழகத்தினால் இரத்துச்செய்யப்பட்டிருந்த ரூபா 1,136,587 பெறுமதியான காசோலை உரிய கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாமல் இரத்துச்செய்யப்பட்ட காசோலை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| **(iii)** | நிதிப்பிரமாணம் 757(2) மற்றும் (4) | - 2016 ஆண்டிற்காக 05 பீடங்களுக்கு உரிய 07 திணைக்களங்கள் மற்றும் ஏனைய 02 பிரிவுகளில் பண்டகக் கணிப்பீட்டறிக்கை 2017 ஜூலை 31 வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>- பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான தொடங்கொல்ல பன்னையில் 2015 திசம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்ட பண்டகக் கணிப்பீட்டறிக்கை பிரகாரம் 27 உருப்புகளில் 66 களஞ்சிய அலகுகளில் பண்டக பற்றாக்குறைவுவொன்று அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2016 ஒக்தோபர் 31 வரை அவ் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 770 | மீளாய்வாண்டு இறுதி இருப்பினுள் ரூபா 920,744 பெறுமதியான காலவதியான மற்றும் பயன்படுத்தப்படாத 96 விடயங்கள் மற்றும் மெதுவாக அசையும் ரூபா 1,365,267 ஆன 51 |

| | | |
|---|---|---|
| | | விடயங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 880 | சொத்துக்களுக்கு பொறுப்பாக மற்றும் காசோலை ஒப்பமிடும் அலுவலர்களிடமிருந்து பிணை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்தின் 08 அலுவலர்கள் மற்றும் கலை பீடத்தில் 04 அலுவலர்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2010 திசம்பர் 31 திகதிய பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 26/2010 இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | சுற்றறிக்கை பிரகாரம் திறைசேறியின் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் முன் அனுமதியின்றி தற்காலிக, அமைய, மாற்று, ஒப்பந்த அல்லது உதவி அடிப்படையில் பொது சேவை பதவிகளுக்கு நியமிப்பதை தவிர்க்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசணை வழங்கப்பட்டிருந்தது. எனினும் அதற்கு இணங்காமல் தற்காலிக அடிப்படையில் மருத்துவ பீடம் மற்றும் பல் மருத்துவ பீடங்களுக்காக 06 அலுவலர்கள் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டில் கூட்டுத்தொகை ரூபா 722,768 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95(02) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2003 சனவரி 29 ஆம் திகதிய **PE1/174/1-2003** ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | பல் மருத்துவ உதவி பயிற்சி பாடசாலை பணிப்பாளருக்கு ரூபா 189,165 ஆன பணிப்பாளர் படிகளும், பல் மருத்துவ பீடத்தின் ஏனைய அலுவலர்களுக்காக ரூபா 155,776 சாலை நிர்வாக கட்டணமாக கூட்டுத்தொகை ரூபா 344,941 ஆன தொகை 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் திறைசேறி அனுமதியின்றி செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | 2015 யூலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கை | மீளாய்வாண்டு இறுதியில் செலுத்துவதற்கு பொருத்தமற்றதாக குறிப்பிடப்பட்டிருந்த (Condemned) 15 வண்டிகள் சுற்றறிக்கை பிரகாரம் பராதீனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கள் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இற்கு இணங்க 2015 ஆண்டில் ஏற்பட்ட பிழைகளை பின்னோக்கிய ரீதியில் திருத்துவதற்காக, மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் செம்மையாக்கப்பட்ட 04 விடயங்கள் தொடர்பாக ரூபா 239,948,181 ஆன தொகையை திருத்துவதற்கு பல்கலைக்கழக கட்டுப்பாட்டுச்

சபையின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. 2017 ஆகஸ்ட் 10 திகதியே நிதிக்குழுவின் அனுமதிக்கு முன்வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தி மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆவது பிரிவின் பிரகாரம் மேலதிக பணம்,நிலையான வைப்பு, திறைசேறி உண்டியல், குருங்கால வைப்புக்கள் அல்லது வேறு பயனுள்ள முதலீட்டில் ஈடுபடுத்துகையில் நிதி அமைச்சரின் முன்கூட்டிய அனுமதி பெறப்பட வேண்டிய போதும், பல்கலைக்கழகம் மீளாய்வாண்டினுள் நிலையான வைப்புகளில் முதலீடு செய்த ரூபா 307,515,000 இற்காக குறித்த அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 14 மூலதன கருத்திட்டங்களுக்காக முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதிக்கு மீதியாக நிலவிய ரூபா 716,535,063 உம் மற்றும் மீளாய்வாண்டில் கிடைத்த பொது மூலதன மானியங்களில் ரூபா 981,434,553 ஆன பணம் திறைசேறி அனுமதியின்றி வேறு நிர்மாண ஒப்பந்தங்கள், உபகரணங்கள், நூலகசாலை புத்தகங்கள் மற்றும் வார சஞ்சிகைகள் கொள்வனவிற்காக மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்காக உள்ளக ரீதியாக மாற்றப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட இம் மாற்றுதலுக்காக 2017 ஆண்டில் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி பெறப்பட்டிருந்தன.

(ஈ) சிரேஷ்ட உதவி நிதி அதிகாரியொருவரின் உறுதிச்சீட்டு உறுதிப்படுத்தும் எல்லை ரூபா 1,000,000 ஆன போதும், தொலை மற்றும் தொடர் கல்வி மத்திய நிலைய சிரேஷ்ட உதவி நிதி அதிகாரியினால் அவ் எல்லையை விஞ்சி 02 சந்தர்ப்பங்களில் ரூபா 2,751,323 ஆன செலவினங்கள் உறுதிசெய்யப்பட்டிருந்தன.

## 3 நிதி மீளாய்வு

---

### 3.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 76,929,780 ஆன பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆன்டில் மிகை ரூபா 59,032,023 ஆனதால் நிதி விளைவில் ரூபா 135,961,803 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு வெளிநாட்டு மாணவ வருமானம்,பட்டதாரி விண்ணப்ப பதிவு கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பவற்றினால் கிடைத்த வருமானம் ரூபா 78,460,551 வினால் குறைவடைந்தமை மற்றும் வழங்கல் சேவை, மாணவர்களுக்கான நிதி உதவி மேலும் ஏனைய செலவுகள் ரூபா 287,236,910 இனால் அதிகரித்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையிலும் பற்றாக்குறைவும், 2015 மிகையும் ஏற்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டு மீண்டும் பற்றாக்குறைவு ஏற்பட்டிருந்தது. எவ்வாராயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் பணிக்கொடை மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை செம்மையாக்குகையில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 2,007,666,786 ஆன நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆண்டில் ரூபா 4,420,447,807 ஆக இருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் நோக்கம் கீழ் காட்டப்படுகிறது.

- தரமான முதற்தரப்பட்ட மற்றும் பட்டப்பின் படிப்பு வேலை திட்டங்களை கொண்ட பரிபூரண பல்கலைக்கழகமாக்குதல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் விஷேட மத்திய நிலையமாக்குதல்.
- நல்லாச்சிக்கு வழிகோலும் உயர் நிர்வாக மற்றும் நிதி செயற்பாடுகளுடன் கூடிய உயர் கல்வி நிறுவனமாக்குதல்
- அறிவு மற்றும் திறன்களை அடிப்படையாக கொண்ட சேவைகளை சமூகத்திற்கு வழங்குவதற்காக திறந்த மற்றும் தொலை வழிகள் ஊடாக பயிற்சியை வழங்கும் மூன்றாம் தர கல்வி பெறும் சந்தர்ப்பங்களுக்கு விரிந்த பிரவேசம் மற்றும் கூடிய கேள்வியை வழங்கும் பல்கலைக்கழகமாக்குதல்
- பௌதீக மற்றும் உள ரீதியான திருப்தியுடன் கூடிய கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக மாற்று தரம் மற்றும் கலை ரீதியான சூழல் உடன் கூடிய விஷேட தரத்திலான உயர் கல்வி நிறுவனமாக மாறுதல்.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரி செயலாளரின் 2014 பெப்ரவரி 11 திகதிய 02/2014 இலக்க மற்றும் 2014 பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் ஆராய்ச்சி படிகள் செலுத்துதல் என்று வெளிப்படுத்தப்பட்டிருந்த முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4(i) பிரிவின் பிரகாரம் ஆராய்ச்சி படிகள் பெற்றிருந்த உத்தியோகத்தர்களால் ஆராய்ச்சின் தன்மை, செயல்நடவடிக்கை திட்டம், ஆராய்ச்சிக்காக செலவாகும் காலம் மற்றும் ஆராய்ச்சிக்காக பயன்படுத்தப்படும் உபாய முறைமைகளின் விபரங்கள் உள்ளிட்ட ஆராய்ச்சி கருத்திட்ட முன்மொழிவுகளினால் ஆராய்ச்சி முகாமை குழுவிற்கு சமர்ப்பக்கப்பட வேண்டும் எனினும் ஆராய்ச்சி கருத்திட்ட முன்மொழிவினால் முன்வைக்கப்பட வேண்டிய எந்தவொரு அலுவலரும் அதன் விபரங்கல் உள்ளிட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகளினால் செனெற் ஆராய்ச்சி குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், பல்கலைக்கழகத்தினால் 2014 ஆண்டு முதல் கணக்காய்வு திகதியாகிய 2017 ஒக்தோபர் 16 திகதி வரை ஆராய்ச்சி படிகளாக ரூபா 555,184,343 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2014 ஆண்டு முதல் 2017 ஆகஸ்ட் வரையான காலத்தினுள் ஆராய்ச்சி படிகளை பெற்ற அலுவலர்கள் ஆராய்ச்சி தொடர்பான முன்னேற்ற அறிக்கையை ஆராய்ச்சி குழுவிற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை 9 பீடங்கள் ஊடாக முன்வைக்கப்பட்ட 321 ஆராய்ச்சி கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை பரிசீலனை செய்கையில் ரூபா 196,650,289 ஆன ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 79 கருத்திட்டங்கள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. 11 கருத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் 133 கருத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாது நிலவின. மீளாய்வாண்டு வரை ரூபா 130,143,183 பெறுமதியான 179 ஆராய்ச்சி கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை பரிசீலிப்பதற்காக செனெட் ஆராய்ச்சி குழுவிற்கு முன்னேற்ற அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்கலைக்கழக மாணவர்களுக்காக புலமை பரிசு மற்றும் மானியம் பெற்றுக்கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட 252 நிதியங்களின் ரூபா 169,765,714 ஆன மீதி, வருடாந்தம் வழங்கப்பட்ட புலமை பரிசு மற்றும் மானியங்களுடன் ஒப்பிடுகையில் 06 வருட காலத்தினுள் புழமை பரிசில் பெற்றுக்கொடுத்தல் 9

வீதத்திற்கும் குறைந்த வீதத்தில் நிலவியதுடன், 2016 ஆண்டில் 3.1 சதவீதமாக இருந்தது.

(ஈ) மாணவ திறன் விருத்தி (**Divelopment of Student Skill**) கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2014 – 2016 காலப்பகுதினுள் ரூபா 36,000,000 பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும், அக் கருத்திட்டத்தின் இலக்கை அடைந்துகொள்வதற்காக எவ்வித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2016 ஆண்டு கணக்கின் பிரகாரம் அக் கருத்திட்டத்திற்காக பெறப்பட்ட பணத்திலிருந்து ரூபா 11,000,000 தொகை தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(உ) 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலத்தினுள் பல்கலைக்கழகத்தின் நிலையான வைப்புகளின் பெறுமதி ரூபா 731,237,632 இல் இருந்து ரூபா 1,295,096,630 வரை தொடர்ந்து வளர்ந்திருந்தது. நிதியங்கள் குறித்த இலக்கை அடைவது தொடர்பில் பயனுள்ளதாக பயன்படுத்திக்கொள்வதற்கான கவனம் செலுத்தப்படாமை, இவ்வாறு நிலையான வைப்புக்களின் பெறுமதி தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தது. இதனுள் பிரதானமாக ஆராய்ச்சிக்காக கிடைத்த நிதியம் மற்றும் வேறு நிதியங்களுக்கு சொந்தமான முதலீடுகள் நிலவியதுடன், அந் நிதிய பயன்பாடு தொடர்பாக முகாமை கூடிய கவனத்தை செலுத்த வேண்டும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) ஆராய்ச்சி பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலம் முடிவடைந்துள்ள கூட்டுத்தொகை ரூபா 2,149,350 ஆன மூன்று ஆராய்ச்சி கருத்திட்டங்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் கணக்காய்வு திகதியாகிய 2016 ஒக்தோபர் 12 திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) உயர் கல்வி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட வளங்கள், காலம் மற்றும் ஊழியத்தினை பயன்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களுக்கு வெளியிலான 2 வாகன செலுத்துனர் பயிற்ச்சி பட்டறைகள் நிறுவனத்தினால் நடத்தப்பட்டிருந்ததுடன், அதனூடாக ரூபா 124,660 ஆன வருமானம் திரட்டப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தின் நிரந்தர ஊழியர்களுக்கு மேலதிகமாக 3 அலுவலகர்கள் தற்காலிக அடிப்படையில் 6 மாதங்களுக்கு விஞ்ஞான கல்வி கற்கை பிரிவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட போதும், பின்னர் சேவை நீடிப்பினூடாக சேவையில் ஈடுபடுத்திருந்ததுடன் அவர்களுக்காக பட்டப்பின் படிப்பு டிப்லோமா நிதியத்திலிருந்து 2009 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 676,800 ஆன படி தொகை படியாக கொடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து அறவிடப்பட முடியுமான எல்லா பணமும் அறவிடப்பட்ட பின்னர் ஒப்பந்த மீறலிற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேலும் பல்கலைக்கழகத்திற்கு விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 15,934,927 தொகை அறவிடப்பட இருந்தது. 2017 செப்தெம்பர் 30 வரை ஒப்பந்தம் மீறப்பட்டு 05 முதல் 20 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்தும், அவ் ஒப்பந்தங்களிற்காக பிணையாளர்களாக ஒப்பமிட்ட அலுவலர்களிடமிருந்து அல்லது ஒப்பந்தத்தை மீறிய விரிவுரையாளருகளுக்கு எதிராக வழக்கு தொடர்வதனூடாகவோ அப்பணத்தை அறவிட பல்கலைக்கழக முகாமை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கற்கை நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்கையில் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை மீறினால் பல்கலைக்கழகத்திற்கு அறவிடவேண்டிய பணம் அவ் விரிவுரையாளர்களின் சேமலாப நிதியத்திலுள்ள பணத்தால் பதிலீடு செய்வதற்கு இணக்கம் தெரிவித்திருந்தும், 2017 செப்தெம்பர் 30 வரை ஒப்பந்தத்தை மீறிய 05 ஆண்டு முதல் 20 ஆண்டு வரை காலம் கடந்துள்ள 24 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 32,816,182 ஆன தொகையை அறவிட பல்கலைக்கழக முகாமை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2010 ஆண்டில் மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,845,000 பெறுமதியான 07 வண்டிகள் மீளாய்வாண்டில் தொலைத்திருந்த போதும் இது தொடர்பில் முன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) பேராதனை பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக இருந்த போவலவத்த பிரதேசத்தில் 16 ஏக்கர் 03 பர்சஸ் விசால அளவான காணியொன்று 1985 ஒக்டோபர் 16 திகதிய இல்கம் 1356 கொண்ட குத்தகை உறுதி மூலம் மற்றும் 1986 செப்தெம்பர் 22 திகதிய இலக்கம் 1520 கொண்ட குத்தகை உறுதி மூலம் 99 ஆண்டுகளுக்கான குத்தகை அடிப்படையில் கண்டி சர்வதேச பௌத்த அமைப்பு எனும் பெயர் கொண்ட அமைப்பொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அக் காணியில் பல்கலைக்கழகத்தின் அனுமதியின்றி கட்டிடம் கட்டப்பட்டிருந்தது.

(ஊ) தேசிய விஞ்ஞான அடிப்படை, கார்ப் (CARP) தேசிய அடிப்படை கற்கை நிறுவனம் (NIFS) , IAEA, பல்வேறு அரச அமைச்சுக்கள் மற்றும் தனியார் மட்டத்தில் பல்கலைக்கழகத்திற்கு நிதி பெற்றுக் கொள்வதனூடாக செயற்படுத்தப்படுகின்ற 78 ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 95,659,812 செலவிடப்பட்டதுடன் அவ் ஆராய்ச்சி நிதியத்தில் 2016 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 100,444,228 ஆன மீதி நிலவியது. இவ் ஆராய்ச்சி கருத்திட்டங்களினூடாக செயற்படுத்தப்படும் ஆராய்ச்சி முன்மொழிவுகளினால் மற்றும் அவ் ஆராய்ச்சிகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக பேராதனை பல்கலைக்கழகத்தினால் மேற்பார்வையோ முடிவாராய்ச்சியோ செய்திருக்கவில்லை.

(எ) தெறிவு செய்யப்பட்ட 06 பல்கலைக்கழகங்களை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுவரும் கருத்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 174,378,670 ஆன தொகையை செலவு செய்திருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செலவிடப்பட்ட பணத்தில் ரூபா 100 மில்லியனிற்கு கிட்டிய தொகை சர்வதேச ஆராய்ச்சி மத்திய நிலைமொன்றை நிறுவதற்காக ஊழியர்களை நியமித்தல் மற்றும் பராமரிப்புக்காக செலவிடப்பட்ட போதும் ஆராய்ச்சி மத்திய நிலையத்திற்கு ஊழியர்களை நியமித்தல் மற்றும் அவர்களின் சம்பளத்தை தீர்மானித்தல் தொடர்பாக சம்பளங்கள் மற்றும் ஊழியர்கள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்படவில்லை.

(ii) கருத்திட்டத்திற்காக 04 ஆண்டுகளில் கிடைத்துள்ள ரூபா 263 மில்லியனில் ரூபா 69,098,520 ஐ 2013 மற்றும் 2016 ஆண்டுகளில் பல்கலைகழகத்தின் பாவனைக்காக தளபாடங்கள் மற்றும் உபகரண கொள்வனவிற்காக மாற்றப்படடிருந்தது.

(ஏ) 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான 05 ஆண்டினுள் தாபன மற்றும் மனித வள அபிவிருத்திற்கான 04 விஷேட கருத்திட்டங்களிற்காக ரூபா 380,200,000 ஆன ஒதுக்கீடு கிடைத்துள்ளதுடன், ரூபா 220,487,945 ஐ குறித்த நோக்கை அடைந்து கொள்ள செலவிடப்பட்டிருந்த போதும் அக்கருத்திட்டங்களுக்காக செயற்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பல்கலைக்கழகத்தினை நடாத்திச்செல்லும் 73 ஏக்கர் 53.4 பர்சஸ் அளவான காணி, முறையாக பல்கலைக்கழகத்திற்கு கையேற்று அவற்றின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கலை பீடத்திற்கு இணைக்கப்பட்டுள்ள நிரந்தர சேவையில் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளனி ஊழியர்கள் அவர்களின் பொதுவான கடமை நேரத்தினுள்ளேயே கலை பீடத்தின கீழ் நடாத்தப்படும் வேறு நிதியங்களிற்குறிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக, 2015 ஆண்டில் 63 அலுவலர்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 1,719,229 ஐ மற்றும் 2016 ஆண்டில் 44 அலுவலர்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 1,115,893 ஐ படியாக கொடுப்பனவு செய்துள்ளதுடன், 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் தற்காலிக அடிப்படையில் கலை பீடத்தில் கடமையாற்றிய அலுவலர்களுக்கு ரூபா 6,662,829 தொகை படிகளாக செலுத்தப்பட்டிருந்தன.

### 4.4 புலப்பட்ட ஒழுங்கீனங்கள்

பல்கலைக்கழக உபவேந்தரின் 2012 செப்தெம்பர் 29 திகதிய சுற்று நிறுபத்திற்கு மாற்றமாக ஐக்கிய இராச்சியத்தின் ஹடர்ஸ்பீல்ட் (University of Huddersfield) பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் Capacity Building and Asia for Resilience Education (CABAREK) கருத்திட்டத்திற்காக கட்டுப்பாட்டு குழுவினதோ பல்கலைக்கழக உபவேந்தரினதோ முன் அனுமதியின்றி பல்கலைக்கழகம் சார்பாக பொறியியல் பீட பேராசிரியர் ஒருவரினால் 2017 பெப்ரவரி 02 ஆம் திகதி ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. கருத்திட்டம் தொடர்பாக ரூபா 5,582,878 தொகையை அவ் பேராசிரியரினால் தனிப்பட்ட வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், 2017 ஜுலை 14 திகதி குறிப்பிட்ட பணம் பொறியியல் பீட ஆராய்ச்சி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2017 ஆகஸ்ட் 15 திகதி பல்கலைக்கழக உபவேந்தரினால் இக்கருத்திட்டத்திற்காக மீண்டும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

### 4.5 நிதியக் குறைப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 25,000,000 ஆன ஒதுக்கீடு வழங்கப்பட்ட 07 கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதும், எஞ்ஞிய ரூபா 8,725,499 தொகை செயலற்றதாக நிலவியதுடன் அப்பணம் வேறு கருத்திட்டங்களுக்கு மாற்றப்பட்டு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக ஆராய்ச்சி நிதியத்தினால் பீடங்களுக்கு வழங்கப்படும் ஒதுக்கீடு ஆண்டினுள் பூரணமாக பயன்படுத்தப்படாததுடன், அது தொடர்பில் முறையான பரிசீலனையின்றி ஆண்டு தோறும் பீடத்தினால் வேண்டப்படும் மதிப்பிடப்பட்ட முழு ஆராய்ச்சி கிரயத்தையும் பெற்றுக்கொடுப்பதனால் பீட ஆராய்ச்சி நிதியத்தின் மீதி ஆண்டு தோறும் உயர்வடைதல் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2014 ஆண்டு ரூபா 34,428,515 ஆன பீட ஆராய்ச்சி நிதியத்தின் மீதி மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 92,806,102 வரை 270 வீதத்தால் உயர்வடைந்துள்ளது.

(இ) பயனுறுதிமிக்கதாக உபயோகிக்காமை காரணமாக 04 பிரிவுகளின் கீழ் நிறுவப்பட்ட 596 நிதியங்களின் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் மீதி ரூபா 1,232,459,775 ஆனதுடன், ஆண்டிறுதியில் அம் மீதி ரூபா 1,305,209,788 வரை வளர்ச்சியடைந்திருந்தது. அவற்றில் 62 நிதியக்கணக்குகளில் ரூபா 32,721,565 ஆன தொகை அவற்றின் நோக்கை அடைய உபயோகிக்கப்படாது 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலம் செயலற்று நிலவியது.

(உ) வெளி நிறுவனங்களினால் நிதியளிக்கப்பட்ட ரூபா 628,537,264 ஆன 14 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் தொடர்பில் எவ்வித பணமும் செலவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 16 நிர்மாண கருத்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 818,000,000 ஆன மானியங்கள் மூலம் குறித்த செயற்பாட்டிற்காக ரூபா 531,233,261 உபயோகிக்கப்பட்டிருந்ததுடன் அது ஒதுக்கீட்டின் 65 சதவீதம் மாத்திரமே.

## 4.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனம் சட்டபூர்வமாக நிறுவப்பட்டிருக்காத போதும் அதற்காக ரூபா 21,000,000 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு மருத்துவ பீடத்தின் மயக்க மற்றும் கதிர் ஆராய்ச்சி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. உபகரணங்ககளின் உத்தரவாத காலம் முடிவடைந்த போதும் பாவனைக்கு எடுக்கப்படாமல் ஓராண்டிற்கு அதிக காலம் நிலவுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் இவ் உபகரணங்களின் பாவனை தொடர்பாக வழங்கல் நிறுவனம் மூலம் கொடுக்கப்படும் பயிற்சியையினும் பெற்றுக்கொள்ள பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஒக்தொபர் மாதத்தில் கலை பீட மாணவர்களின் புத்தாக்க முன்னேற்ற கருத்திட்டத்தினால் (Invatory Development of Art Student) வழங்கப்பட்ட ரூபா 3,427,621 பெறுமதியான பொருட் பதிவேட்டுப் பொருட்கள் 02 வருடங்களிற்கு கிட்டிய காலமாக எவ்வித பாவனையுமின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) 2010 ஆண்டில் பல்கலைக்கழக கற்கையின் பொருத்தப்பாடு மற்றும் தரத்தை முன்னேற்றும் (IRQUE) கருத்திட்டத்தினால் ரூபா 1,191,381 செலவில் கலை பீடத்தின் அறையொன்றில் கணனி பாகுபடுத்தல் கூடம் அமைக்கப்பட்டு அவ்வறை கலைபீடத்தின் வேறு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போதும், இவ்வறை மற்றும் குறித்த பாகுபடுத்தல் எவ்வித பிரயோசனமுமின்றி 05 ஆண்டுகளுக்கு மேலாக செயலற்று நிலவியது.

(ஈ) விடுதி வசதிகள் பணிப்பாளரினால் எல்லா விடுதிகளுக்கும் 9W கொண்ட LED மின்குமிழ்களில் தேவை 4590 என பல்கலைக்கழக முகாமைக்கு அறிவித்த போதும், அதனை அலட்சியம் செய்து 9W மின்குமிழிற்கு பதிலாக ரூபா 9,350,000 பெறுமதி கொண்ட 12W LED குளோப் மின்குமிழ்கள் 7000 மற்றும் தேவைப்பாட்டை அறியாது 4' கொண்ட 2000 குழாய் மின்குமிழ்களையும் கொள்வனவு செய்திருந்தது. கணக்காய்வு திகதியின் போது LED மின்குமிழ்கள் கொள்வனவு செய்து ஓராண்டும் 03 மாதங்களும் கடந்திருந்த போதும் ரூபா 3,181,800 கூட்டுப்பெறுமதியான அதாவது கொள்வனவு தொகையின் 46 சதவீதமான 3220 LED மின்குமிழ்கள் பாவனைக்கு எடுக்காது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. விலை இறக்கம், தொழில்நுட்ப மாற்றம் மேலும் வரையறுக்கப்பட்ட உத்தரவாத காலம் வழங்கப்படும் இவ்வாறான உபகரணங்களை கொள்வனவு செய்து தேவையற்ற விதத்தில் களஞ்சியப்படுத்தியமை சிக்கனமற்ற செலவுகளாக அவதானிக்கப்பட்டன.

(உ) நிர்மாணப் பணி முடிவடைந்து பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட ரூபா 676,283,400 பெறுமதியான 03 மாணவ விடுதிகள் தேவையான அடிப்படை வசதிகள் வழங்கப்படாமையினால் 2017 ஒக்டோபர் 31 திகதியிலும் மாணவர்களின் பாவனைக்கு உபயோகிக்காமல் 10 மாதம் முதல் 03 ஆண்டு காலமாக செயலற்று நிலவியது.

## 4.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த ஒப்பந்தத்தை மீறிய பழைய விரிவுரையாளர்களில் பதிவேடுகளின் பிரகாரம் ஓய்வு பெற்ற 78 பேரிடமிருந்து 2016 திசம்பர் 31 திகதிக்கு ரூபா 34,028,333 ஆன ஒப்பந்தப் பணத்தை அறவிட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(ஆ) பல்கலைக்கழக விவாசாய பீடத்தில் பணியாற்றிய விரிவுரையாளர் ஒருவர் 2014 ஆகஸ்ட் 04 திகதி முதல் சம்பளமற்ற விடுமுறையில் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவன பணிப்பாளர் பதவிக்கு 03 ஆண்டு காலத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். அக்காலத்தின் இடையே இப் பேராசிரியருக்கு 11 மாதங்களும் 03 நாட்களுக்காக பல்கலைக்கழகத்தினால் கட்டுப்பாட்டுச்சபை அனுமதியின்றி சம்பளத்துடன் ஏழு வருடத்திற்கான (Sabbatical Leave) விடுமுறை வழங்கப்பட்டு அனைத்துப் படிகளுடன் பல்கலைகழகத்தினாலும் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதி ஆகிய 2017 மார்ச் 03 திகதி வரை 06 மாதகாலத்திற்காக ரூபா 1,523,935 தொகை சம்பளம் மற்றும் படிகளாக பிழையாக செலுத்தப்பட்டிருந்தன.

## 4.8 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயற்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு முடிவிலும் வேலை பூர்த்திசெய்யப்படாத தாமத காலம் 760 நாட்கள் முதல் 1063 வரையான 03 கருத்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் ஒதுக்கிய பணத்தை உபயோகிக்காது வேறு கருத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு ஆரம்பத்தின் போது வேலை பூர்த்தி செய்யப்படாத 06 கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 365,652,114 ஆன ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா 356,400,000 வை வேறு கருத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொண்ட மூலதன அன்பளிபை குறித்த கருத்திட்டங்களுக்காக முக்கியத்துவ அடிப்படையில் அறிந்து ஒதுக்குவதற்கு பதிலாக திட்டமின்றி வெவ்வேறு கருத்திட்டங்களுக்கு மாற்றுதல் மற்றும் ஒவ்வொரு கருத்திட்டங்கள் தொடர்பில் ஒப்பந்தப்படி நடவடிக்கை எடுக்கப்படாமையினால் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் பல ஆண்டுகள் தாமதித்தன.

(ஈ) 2016 திசெம்பர் 31 திகதிக்கு மூலதன வேலைகள் திணைக்கள பதிவேடுகளின் பிரகாரம் பௌதீக வளர்ச்சி 100 வீதமாக காட்டப்பட்ட 32 கருத்திட்டங்கள் 2017 செப்தம்பர் 30 திகிதியிலும், செயற்படும் கருத்திட்டங்களாக ஆண்டிறுதி நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தன. வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியை விஞ்சி 288 முதல் 1661 நாட்கள் வரையான காலம் கடந்த போதும், அதற்கான காரணத்தை இணங்கண்டு திருத்துவதற்கு மற்றும் 2016 திசெம்பர் 31 திகதியில் செலுத்த வேண்டிய ரூபா 93,242,303 வை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய 36 கருத்திட்டங்கள் 2017 செப்தம்பர் 30 திகதி வரையும் வேலை பூர்த்தி செய்யப்படவில்லை.

(ஊ) விவசாய பீட செயற்பயிற்சிக்காக நடாத்திச்செல்லப்படும் மகாஇலுப்பல்லம விவசாய உப பீடத்தில் ஓராண்டினுள் 06 மாதகால அளவில் 150 அளவான மாணவர்கள் கற்கை நடவடிக்கையில் ஈடுப்பட்டனர். எனினும் அது தொடர்பாக மதிப்பீடு செய்யாது 400 மாணவர்களுக்காக ரூபா 225,427,400 பெறுமதியான மாணவ விடுதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு சந்தர்ப்பத்தின் போது 200

மாணவர்களுக்கு மாத்திரம் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை படி, கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களை ஒப்பிடும் போது 7 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விஞ்சி 69 சதவீதம் முதல் 3250 வரையான விலகலுள் வருமானம் சேகரிக்கப்பட்டிந்ததுடன், பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களை ஒப்பிடும் போது 23 செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட செலவை விஞ்சி 20 சதவீதம் முதல் 100 சதவீதமான விலகலுள் செலவிப்பட்டிருந்தது. இன்னும், 24 செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட செலவினங்களின் 18 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை விலகலுள் சேமிப்பு நிலவியது. இதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | வருமானமும் செலவினமும் முறையாக வேறுபடுத்தப்படாமை. |
| (ஆ) | நிதிக் கட்டுப்பாடு | (i) | பேற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் தீர்க்க நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | நிதியங்கள் முறையாக தொடர்புடைய நோக்கங்களை மேற்கொள்வதற்கு பயன்படுத்தாமை. |
| (இ) | பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிருவாகம் | (i) | நிதி ஒதுக்கீடு மீது மதிப்பீடியின்றி பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளுதல் |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| | | (ii) | நிர்மாண நடவடிக்கைகள் உடன்படிக்கைகள் பிரகாரம் மேற்கொள்ளாமை. |